**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை 600 113**

**ஆய்வுத்திட்ட நிதிநல்கைக்கான விண்ணப்பப் படிவம்**

**2017-2018 ஆண்டிற்கான ஆய்வுத்திட்ட முன்மொழிவு**

Affix Stamp Size Photo

| | | | |
|---|---|---|---|
| **1.** | **பெயர்** | **(தமிழில்)** | |
| | | **(ஆங்கிலத்தில்)** | |
| **2.** | **பிறந்த நாளும் வயதும்** | | |
| **3.** | **இனம்** | | **OC/BC/MBC/SC/ST** |
| **4.** | **கல்வித் தகுதி** | | |
| **5.** | **முகவரி**<br>**அலுவலகம் (தொலைபேசி எண்ணுடன்)** | | |
| | **இல்லம் (தொலைபேசி எண்ணுடன்)** | | |
| **6.** | **செல்பேசி** | | |
| **7.** | **மின்னஞ்சல்** | | |
| **8.** | **முறைவழி விண்ணப்பிக்கும் நிறுவன முகவரி** | | |
| | **நிறுவனத் தலைவரின் கையொப்பம்**<br>**(பெயர், முகவரி மற்றும் இலச்சினையுடன்)** | | |
| ***** | **அரசுசாரா நிறுவனமாயின் (NGO)**<br>**அ. பதிவு எண் (NGO Portal Reg.No.)**<br>**ஆ. ஆவணங்கள்**<br>**இ. கடந்த ஓராண்டிற்கான தணிக்கை சான்றிதழ்** | | |
| **9.** | **தங்கள் முனைவர் பட்ட ஆய்வுத்தலைப்பு** | | **தமிழ்:** |
| | | | **ஆங்கிலம்:** |

| | | |
|---|---|---|
| **10.** | ஆய்வுத்திட்டத் தலைப்பு | தமிழ் :<br><br>ஆங்கிலம்: |
| **11.** | எதிர்பார்க்கும் மொத்தச் செலவினம் | |
| | இணைப்புகள்<br>i. ஆய்வுச்சுருக்கம்<br>ii. செலவின வகைப்பாடு<br>iii. விரிவான தன்விவரக் குறிப்பு<br>(i) முன் ஆய்வு விவரங்கள்<br>(ii) நூல் வெளியீடுகள்<br>(iii) பணி அனுபவம்<br>(iv) ஆய்வுச் சாதனை | |
| **12.** | இந்நிறுவனத்தின் ஆய்வுத்திட்ட நிதிநல்கையில் ஆய்வு மேற்கொண்டு இருக்கிறீர்களா? | ☐ ஆம் ☐ இல்லை |
| | ஆம் எனில், விவரங்களைத் தருக. | |
| **13.** | ஏற்கனவே வேறு ஏதேனும் நிறுவன நிதிநல்கைக்கு இந்த ஆய்வுத்திட்ட முன்மொழிவு அனுப்பப் பெற்றிருக்கிறதா? | ☐ ஆம் ☐ இல்லை |
| | ஆம் எனில், விவரங்களைத் தருக. | |
| **14.** | செம்மொழித்தமிழாய்வு மத்திய நிறுவனக் கருத்தரங்கு/பயிலரங்கிற்கு விண்ணப்பித்துள்ளீர்களா? | ☐ ஆம் ☐ இல்லை |
| | ஆம் எனில், விவரங்களைத் தருக. | |

1. இந்திய அரசின் நெறிகாட்டுதலுக்கேற்ப இணையதள வாயிலில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.*
2. ஏற்கனவே பழைய படிவத்தில் விண்ணப்பித்திருப்பவர்களும் புதிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
3. மொழிப்பெயர்ப்புத் திட்டங்கள் : மாதிரி மொழிபெயர்ப்புகள் (20பாடல்கள்) அனுப்புதல் வேண்டும்.

நாள்:

இடம்: கையொப்பம்

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

## ஆய்வுத்திட்டங்கள் - உதவித்தொகை

கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு உட்பட்ட செவ்வியல் இலக்கண இலக்கிய நூல்கள், பிற வரலாற்றுத் தொல்லியல் தரவுகளைக் களனாகக் கொண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ஆய்வில் ஈடுபட்டு வருகின்றது. இந்த நிறுவனத்தின் பெருந்திட்டங்கள் மற்றும் துறைப்பணிகள் ஆகியவற்றிற்குத் துணைநிற்கும் வண்ணமும், செம்மொழித் தமிழாய்வின் வளர்ச்சிக்கு உதவுமாறும் **ஆய்வுத்திட்டங்கள்** என்ற அமைப்பு உருவாக்கப்பெற்றுள்ளது. நிறுவனச் செயல்வட்டத்திற்கு வெளியே அமையும் மூத்த ஆய்வறிஞரையும் ஆய்வு நிறுவனங்களையும் அந்நிறுவன ஆய்வு அலுவலரையும் அரசுசாரா நிறுவனம்வழி ஈடுபட விழையும் ஆய்வு வல்லுநரையும் பயன்கொண்டு செம்மொழித் தமிழாய்வுக்கு வளர்ச்சி நல்குவதற்காக இந்த ஆய்வுத்திட்டங்கள் வழங்கப்பெறுகின்றன. பெரும்பாலும் ஓராண்டுக்கால அளவும் ரூ. 2.5 இலட்சம் நல்கையுமாக இது அமையும்.

விண்ணப்பங்கள் ஆண்டுதோறும் பெறப்பட்டுத் தெரிவு செய்யப்பெறும்; இவ் விண்ணப்பங்களை வழங்கிய ஆய்வு வல்லுநர், இதற்கென அமைந்த தேர்வுக் குழுவினர் முன் தம் ஆய்வுத்திட்ட முன்வரைவை நேரில் வழங்க அழைக்கப்பெறுவர்; தகுதியான ஆய்வுத்திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பெற்று, உரிய நெறிமுறைகளுடன் நிதியுதவி வழங்கப்பெறும். முதன்மை ஆய்வாளர், பணியில் இல்லாத நிலையில் மட்டுமே மதிப்பூதியம் பெற இயலும்.

ஆய்வுத்திட்ட விண்ணப்பங்கள், முகப்புக் கடிதம், **ஆய்வுத்** தலைப்பும் **சுருக்கமும்** (இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அடிப்படையில்), விண்ணப்பிப்பவரின் **விரிவான தன்விளக்கம்** (பட்டம் பெற்ற ஆய்வுத்தலைப்புகள், நிறைவேற்றிய ஆய்வுத்திட்டங்கள், வெளியிட்ட நூல்கள் / ஆய்வுக்கட்டுரைகள், தற்போது செய்துவரும் திட்டம் ஆகியவை தொடர்பான தரவுகளுடன்**), எதிர்நோக்கும் திட்டச் செலவின வரைவு** (காண்க: **மாதிரி**) ஆகியவற்றுடன் அனுப்பப்பெற வேண்டும். **பணியில் இருப்பவர் தம் விண்ணப்பத்தை முறைவழிப்பணிந்து அனுப்புதல் வேண்டும். அரசு சாரா நிறுவனமாயின், www.ngo.india.gov.in என்ற இணையத்தில் பதிவு செய்த எண்ணை விண்ணப்படிவத்தில் குறிப்பிட்டு உரிய ஆவணங்களை இணைக்கவேண்டும்**. (காண்க:**விண்ணப்பப் படிவம்**) விண்ணப்பம், **இருபடிகள்**, முறைவழிப் பணிந்து, ***இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சாலைப்போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை 600 113*** என்ற முகவரிக்கு அனுப்பப்பெறவேண்டும்.

**எதிர்நோக்கும் திட்டச் செலவின வரைவு- மாதிரி**

| வ.எண் | **பொருண்மை** | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | மதிப்பூதியம்- முதன்மை ஆய்வாளர் (பணியில் இருப்பின்) | இல்லை |
| 2. | திட்ட உதவியாளர் (1x8000x12) | 96,000 |
| 3. | கலந்தாய்வு /நேர்முகம்/ பயிற்சிப்பட்டறை | 30,000 |
| 4. | நூல்களும் ஆய்விதழ்களும் | 35,000 |
| 5. | எழுதுபொருள் /ஒளிநகல் / ஒளியச்சு | 35,000 |
| 6. | பயணம் / களப்பணி | 30,000 |
| 7. | பிற செலவினங்கள் (தணிக்கை உட்பட) | 24,000 |
| | **மொத்தம்** | **2,50,000** |

## ஆய்வுக்களன்

- தொன்மை
- ஒப்பீட்டாய்வுகள்
- திறனாய்வுக் கோட்பாடுகள்
- ஓலைச் சுவடிகள்
- தமிழர் நாகரிகமும் பண்பாடும்
- மொழிபெயர்ப்பு
- உளவியல்
- இலக்கியம் (செவ்வியல் தமிழ்நூல்கள்)
- தமிழர், தமிழ்மொழி மற்றும் தமிழ் இலக்கியவரலாறு
- வரலாற்று இலக்கணம்
- மொழியியல் (தமிழ்ச் செம்மொழி இலக்கணம், இலக்கியம் சார்ந்து)
- சமயவியல்
- தத்துவவியல்
- சமூகவியல்
- சூழலியல்
- குறியீட்டியல் (41 செவ்வியல் தமிழ்நூல்கள்)
- தமிழும் பிற செம்மொழிகளும்

## ஆய்வுச்சுருக்கத்தின் வடிவமைப்பு

1. ஆய்வுத்திட்டத் தலைப்பு
2. இத்திட்டத்தின் முக்கியத்துவம்
3. இதுவரை இப்பொருண்மைபற்றி வந்துள்ள முன்ஆய்வு விவரங்கள் (விரிவான விளக்கத்துடன்)
4. இந்நிலையில் தற்போதைய ஆய்வின் தேவை
5. இவ்ஆய்வின் நோக்கம் (கருதுகோள்)
6. மேற்கொள்ளவிருக்கும் ஆய்வுநெறிமுறைகள்
7. ஆய்வின் காலத்திட்டம்
8. ஆய்வேட்டின் அமைப்பு முறை
9. விரிவான நூலடைவு
10. செம்மொழித் தமிழ் உயராய்வுக்குத் தங்களது ஆய்வுத்திட்டப் பங்களிப்பு

இவ்வடிப்படையில் ஆய்வுச்சுருக்கம் (5முதல் 20 பக்கங்களுக்குள்) தட்டச்சு செய்யப்பெற்று ஐந்துபடிகள் ஒரு மென்படியுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.